# மிளகாய் வற்றலுக்கான விலை முன்னறிவிப்பு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டமானது, மிளகாய் வற்றலுக்கான விலை முன்னறிவிப்பை உருவாக்கியுள்ளது.

உலகளவில், மிளகாய் வற்றல் உற்பத்தி, நுகர்வோர் மற்றும் ஏற்றுமதியில் இந்தியா முதன்மையாக திகழ்கிறது. சீனா, தாய்லாந்து, எத்தியோப்பியா மற்றும் இந்தோனேசியா ஆகியவை முக்கிய மிளகாய் உற்பத்தி செய்யும் முக்கிய நாடுகளாகும். இந்திய மிளகாயின் நிறம் மற்றும் காரத்தன்மை ஆகிய வணிக பண்புகளுக்காக உலகப் புகழ் பெற்றது. மொத்த மிளகாய் உற்பத்தியில் 80 சதவீதம் உள்நாட்டிலேயே நுகரப்படுகிறது. இந்தியாவில், 2021-22 ஆம் ஆண்டில் 8.52 லட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 15.78 லட்சம் டன் மிளகாய் உற்பதிசெய்யப்பட்டுள்ளது. இது, நாட்டின் பரப்பளவில் 29 சதவீதத்தை ஆக்கிரமித்துள்ள முக்கிய சுவையூட்டிகளாகும். இந்தியாவில் மிளகாய் பயிரிடப்படும் முக்கிய மாநிலங்களாகிய ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, மகாராஷ்டிரா மற்றும் தமிழ்நாடு ஆகியவற்றின் பங்களிப்பு, நாட்டின் மிளகாய் சாகுபடியின் மொத்த பரப்பளவில் கிட்டத்தட்ட 75 சதவீதமாகும். இந்தியா, 2021-22-ஆம் ஆண்டில் 2.59 லட்சம் டன் மிளகாயை ஏற்றுமதி செய்துள்ளது. மிளகாய் முக்கியமாக சீனா, இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு மிளகாய் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தமிழகத்தில் 2021-22ம் ஆண்டில் 0.54 லட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு 0.24 லட்சம் டன் மிளகாய் உற்பத்தி செய்யப்பட்டது. மிளகாய் வற்றல் முக்கியமாக இராமநாதபுரம், விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் பயிரிடப்படுகிறது. தமிழ்நாட்டில் முண்டு மற்றும் சன்னம் ஆகியவை முக்கிய இரகங்களாக பயிரிடப்படுகிறது. இவை அக்டோபர்-நவம்பர் மாதங்களில் விதைப்பு மேற்கொள்ளப்படுகிறது.

வர்த்தக மூலங்களின்படி, கடந்த பருவநிலை காட்டிலும் இந்த முறை ஆந்திராவிலிருந்து மிளகாய் வரத்து போதிய அளவில் டிசம்பர் மாதத்திலிருந்து வரத்தொடங்கியுள்ளது. தமிழகம் மற்றும் ஆந்திராவில் பரப்பளவு மற்றும் உற்பத்தி இயல்பாகவே உள்ளது. தமிழகத்தைப் பொறுத்தவரை பிப்ரவரி மாதம் இறுதி வாரத்தில் சந்தைக்கு மிளகாய் வரத்து வர தொடங்கும் என

அறியப்படுகிறது. புதிய வரத்து சந்தைக்கு வரும்போது தமிழகத்தில் விலை குறையத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சூழலில், விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்க ஏதுவாக விலை முன்னறிவுப்பு திட்டம், கடந்த 15 ஆண்டுகளாக திருநெல்வேலி சந்தையில் நிலவிய மிளகாய் விலையை மற்றும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வுகளின் அடிப்படையில், அறுவடையின் போது தரமான சன்னம் இரக மிளகாய் வற்றலின் சராசரி பண்ணை விலை குவிண்டாலிற்கு ரூ.180/- முதல் ரூ.200/- வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில், சந்தை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றது.

**மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்**
உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்- 641 003
தொலை பேசி – 0422 – 2431405

இயக்குனர் மற்றும் முனைஅதிகாரி
தமிழ்நாடு நீர்வளநிலவளத் திட்டம்
நீர் நுட்ப மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்- 641 003
தொலை பேசி – 0422 – 6611278

**மற்ற விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்**
பேராசிரியர் மற்றும் தலைவர்
வாசனை மற்றும் தோட்டக்கலை பயிர்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்- 641 003
தொலை பேசி – 0422 – 6611284

**Price forecast for Red Chilli**

The TN-IAM Project funded Price Forecasting Scheme of the Centre for Agricultural and Rural Development Studies, Tamil Nadu Agricultural University, Coimbatore has developed market advisory for Red Chilli.

India is the World's largest producer, consumer and exporter of chillies. China, Thailand, Ethiopia and Indonesia are other major chilli producing countries. Indian chilli is considered to be World famous for two important commercial qualities *viz.,* colour and pungency levels. Around 80 per cent of India's production is consumed within the country. It is the major spice crop occupying about 29 per cent of total area under spices cultivation accounting for nearly 8.52 lakh hectares with a production of 15.78 lakh tonnes of chilli during 2021-22. The major chilli growing states in India are Andhra Pradesh, Karnataka, Maharashtra and Tamil Nadu which constitute nearly 75 per cent of the total area under chilli. India exported 2.59 lakh tonnes of chillies in 2021-22 in the form of dried chillies, chilli powder, picked chillies and chilli oleoresin. Indian chilli is mainly exported to Asian countries like China, Sri Lanka and Bangladesh.

In Tamil Nadu, 0.24 lakh tonnes of chilli was produced from 0.54 lakh hectares during 2021-22. Chilli is mainly grown in Ramanathapuram, Virudhunagar, Tirunelveli and Thoothukudi districts and sparsely grown in almost all other districts. Mundu and sannam are the major varieties grown in Tamil Nadu and sowing of chilli will be taken up mainly in October-November.

According to trade source, the Andhra Pradesh arrivals started in the month of December and as compared to previous season this year arrivals are better. In case of Tamil Nadu, normal arrivals is expected to commence from February last

week. When, the fresh arrivals from Tamil Nadu flows into the market the price will start decline.

In this situation, Price Forecasting Scheme has analyzed the past 16 years of red chilli prices that prevailed at Tirunelveli regulated market for sannam variety. The analysis and traders survey results showed that the farm gate price for sannam variety will rule around Rs. 180-200 per kg at the time of harvesting. Hence, the farmers are advised to take up selling decision accordingly.

***For Marketing information details contact:***

*Domestic and Export Market Intelligence Cell*
*Centre for Agricultural and Rural Development Studies (CARDS)*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003*
*Phone: 0422-2431405*

*The Director and TN-IAMP Nodal Officer*
*Water Technology Centre*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003*
*Phone: 0422-6611278*

***For Technical Details contact:***

*Professor and Head,*
*Department of Spices & Plantation Crops*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore – 641 003*
*Phone: 0422-6611284*